# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1017/2024
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | வில்சன் | -- | |
| Father's Name | தேவராஜ் | Calling | தனியார் நிறுவனம் |
| Village | திண்டிவனம் | Religion | |
| Taluk | திண்டிவனம் | Age | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused present

**முதல் விசாரணை**

எனக்குச் சொந்த ஊர் திருத்தங்கல் ஆகும். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சரவணப்பிள்ளையார் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் சுஜாதா. எங்களுக்கு கிருத்திக் என்ற மகனும், பிரதிஜா ஸ்ரீ என்ற மகளும் இருக்கிறார்கள். ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். இவ்வழக்கில் இறந்து போன செல்வம் எனது அம்மா ஆவார். 21.04.2024ம் தேதி நான் திண்டிவனத்தில் இருந்தபோது ஆஜர் எதிரியான எனது அண்ணன் போன் மூலமாக எனது அம்மா செல்வத்தை உடல்நிலை சரியில்லாததால் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக சொன்னார். அதனால் நானும், எனது அப்பா தேவராஜீம் வந்தோம், அங்கு வந்து பார்த்தபோது ஆஜர் எதிரியும் கை, கால்களில் அடிபட்டு இருந்தார், எனது அம்மாவும் ஐ,சி.யூ வார்டில் இருந்தார். நான் விசாரித்தபோது எனது அண்ணனும், அம்மாவும் இருசக்கர வாகனத்தில் போகும் போது தவறி கீழே விழுந்ததாக தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் மல்லி காவல் நிலைய போலிசார் அங்கு வைத்து எழுதப்படாத ஒரு வெள்ளைப் பேப்பரில் என்னிடம் கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டார்கள். மறுநாள் சிகிச்சை பலனின்றி எனது அம்மா இறந்துபோய்விட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசாரிடம் நான் புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வேண்டுகோளின்பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

__அரசு தரப்பில் குறுக்கு விசாரணை__

போலிஸ் விசாரணையில் 21.01.2024 காலை 07.45 மணியளவில் ஆஜர் எதிரி எனது அம்மாவை TN95J1378 என்ற இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு பண்டிதன்பட்டி விலக்கு அடுத்துள்ள பென்னிங்டன் பள்ளி அருகில் வேகமாக சென்று வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கீழே விழுந்து எனது அண்ணனுக்கும், அம்மாவுக்கும் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும் 108 ஆம்புலன்சில் அவர்களை ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்திருப்பதாகவும், எனது அண்ணனுக்கு சிறிய காயம் என்பதால் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை எனவும், எனது அம்மாவை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும், விபரம் தெரிந்து நான் திண்டிவனத்திலிருந்து வந்து மருத்துவமனையில் பார்த்தபோது எனது அம்மா இறந்துபோய் விட்டதாகவும், நடந்த சம்பவத்திற்கு மல்லி காவல் நிலைய போலிசாரிடம் நான் ஒரு புகார் மனு கொடுத்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த அண்ணன் என்பதால் அவரைக் காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:41:35 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**